இறுதியிலான பகுப்பாய்வின் படி 72 சதவீதங்கொண்ட அதிகரிப்பு நுகர்ச்சிப் பொருட்களின் அதிகரித்த விலைகள் காரணமாகவும், 24 சத வீதம் இடைநிலைப் பொருட்களின் அதிகரிப்பின் காரணமாகவும், 4 சதவீதம் முதலீட்டுப் பொருட் களின் அதிகரிப்பின் காரணமாகவும் ஏற்பட்டதைக் குறிக்கின்றது. நிலையான (1970) விலைகளில் அமைந்த மொத்தத் தேசிய உற்பத்திக்கு நடைமுறை விலை களில் அமைந்த மொத்தத்தேசிய உற்பத்தியின் விகிதமான உள்ளடக்கவிலைச் சுட்டெண்ணும் (மொத்தத்தேசிய உற்பத்தியின் சுருக்கி) இத்தகையதொரு போக்கினைக்காட்டியது. இது முன்னைய இரு ஆண்டுகளில் காணப்பட்ட 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் 18 சதவீதம் கொண்ட அதி கரிப்பாகும்.

1980ஆம் ஆண்டில் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பல காரணிகளின் ஒருங்கிணைந்த தாக்கம் காரணமாயிற்று. இவை ரூபாயின் பெறுமானத்தேய்வு, சில வரிவீதங்களின் அதிகரிப்பு, பயன்பாட்டுப்பணிகள் கட்டணங்களின் மேல் நாக்கிய திருத்தம், பெற்றோலியப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டுச் சந்தைகளின் விலை உயர்வுகள், குறிப்பாக நுகர்ச்சிப்பொருட்களின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் போன்ற விலை உந் தற் காரணிகளை உள்ளடக்கும். இது தவிர அரசின் செலவினங்களின் தொடர்ச் சியான விரிவாக்கத்தினாலும் வெளிநாட்டுக்குச்சென்ற தொழிற்படையினரின் அதிகரித்த உள்நோக்கிய பண அனுப்பல்களினாலும் தொடர்ச்சியான உள்நாட்டு நாணய விரிவாக்கத்தினாலும் ஏற்பட்டகேள்வித்தாக்கமும் காரணியாக அமைந்தது.

ஓராண்டுக்காலத்திற்குள் விலைமட்டத்தில் ஏற்பட்ட 30 சதவீதம்கொண்ட உயர்ச்சியினைகவனத்துடன் நோக்குதல் வேண்டும். ஏனெனில் இத்தகைய விலை அதி கரிப்பு செயற்திட்டக் கணக்கீட்டினை முடியாததொன்றாக்கி விடும். மேலும் விலைய திகரிப்புக்கள்ஏற்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் திரட்டிய அடிப்படையில், மூலதனச் செயற்றிட்டங்களை பொறுப்பேற்பதற்கு சாதகமற்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத் தும். விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்களை தடுப்பதற்கு தகுந்த விலை உறுதிப்பாடு டைய கொள்கைகள் மேற்கொள்ளப்படாதுவிடின் மிகவும் உயர்ந்த தன்னிச்சை யாக இயங்கும்விலை அதிகரிப்புக்கள் அபிவிருத்தி முயற்சிகள் யாவற்றையும் சீர் குலைத்துவிடும்.

**கூலிகள்**

1980ஆம் ஆண்டில் அரச ஊழியர்களினதும் தனியார்துறை ஊழியர்களின தும் கூலிகள் (கூலிச்சபை சட்டத்திட்டங்கட்குட்பட்ட) உண்மை நியதியில் வீழ்ச் சியடைந்து காணப்பட்டன.

1979ஆம் ஆண்டினைவிட 1980 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களின் பணக் கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980ஆம் ஆண்டில் 10 சதவீதத்தால் அதிகரித்தது. சிற்றூழியர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் என்பவர்களது விடயத்தில் 1980ஆம் ஆண்டிலும் 1979ஆம் ஆண்டிலும் முறையே 21 சதவீதம், 15 சதவீதம் என்பவற்றுக்கு எதிராக 12 சதவீதம் 9 சத வீதமாகக் பணக்கூலிகள் அதிகரித்தன. பணக்கூலியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்புக் கள் 1980 செத்தெம்பர் மாதத்தில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பின் ரூ. 70 முதன்மைக்காரணமாகும்.

1978ஆம் ஆண்டினைவிட 1979ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் அதிகரித்த உண்மைக்கூலியுடன்[1] ஒப்பிடுமிடத்து 1980ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர் களது உண்மைக் கூலி 11.6 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. தொழில்நுட்ப ஊழியர், எழுதுவினைஞர் ஆகியோரது உண்மைக் கூலிகள் 1979ஆம் ஆண்டின் 5 சதவீத அதிகரிப்புக்கெதிராக 13 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. முன் னைய ஆண்டில் 9 சதவீதத்தால் அதிகரித்த உண்மைக் கூலி 1980ஆம் ஆண்டில் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதே வேளையில் பள்ளிக்கூட ஆசிரியர்களின்

---

1. உண்மைக் கூலிகள் பணக்கூலிகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணால் குறைப்பிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது

## கூலிவீதச் சுட்டெண்கள்

1952 = 100



உண்மைக்கூலி 1979ஆம் ஆண்டின் 4 சதவீத அதிரிப்புக்கெதிராக 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தனியார்துறையில் வேளாண்மைத் தொழிலாளர்களின் பணக்கூலி 25சதவீதத்தால் உயர்வடைந்தவிடத்து கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளரது கூலி 22 சதவீதத்தால் அதிகரித்தது. 1979ஆம் ஆண்டின் ஒப்பீட்டு எண்தொகைகள் முறையே 28 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் விளங்கின. தனியார்துறைக்கான தொழிலாளர்களின் இணைந்த பணக்கூலிச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 27சதவீத அதிகரிப்புக்கெதிராக 25 சதவீதத்தால் அதிகரித்தது.

1979ஆம் ஆண்டில் 15 சதவீதத்தால் உயர்வடைந்த வேளாண்மைத்துறை தொழிலாளர்களின் உண்மைக்கூலிகள் 1980ஆம் ஆண்டின் 0.2 சதவீதங்கொண்ட சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. இதே போன்று 1979ஆம் ஆண்டின் கைத்தொழில் வர்த்தகத்துறை தொழிலாளர்களின் உண்மைக்கூலி அதிகரிப்பான 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1980 ஆம் ஆண்டில் 3 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## வர்த்தகம்

1980 ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக நிலுவை சுங்கத் தரவுகளின் அடிப்படையில் ரூ. 163,640 இலட்சம்கொண்ட(சிஎஉ 7,610 இலட்சம்) குறையினைப் பதிவுசெய்தது. 1979ஆம் ஆண்டின் ரூ.72,870 இலட்சம் கொண்ட(சிஎஉ 3,620 இலட்சம்)குறையுடன் ஒப்பிடுகையில் இது 125 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 110 சதவீதம்) கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 1980 ஆம் ஆண்டில் இத்தகைய பாதகமான வர்த்தக நிலைமை ஏற்பட்டமைக்கு இறக்குமதிகளின் பெறுமதிகள் ரூ. 110,770 இலட்சத்தால் அல்லது 49 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 39 சதவீதம்) அதிகரித்து ரூ. 336,370 இலட்சமாக (சிஎஉ 15,630 இலட்சம்) விளங்கியமையே முதன்மைக்காரணியாகும். இதற்கு மாறாக, ஏற்றுமதி வருவாய்கள், 13 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) மட்டும் அதிகரித்து ரூ. 172,730 இலட்சமாக (சிஎஉ 8,030 இலட்சம்) காணப்பட்டது. சில அரச முகவர் நிலையங்களால் மேற்கொள்ளப்பட்ட, இறக்குமதிகள் ஏற்றுமதிகளுக்கான சுங்கத்தரவுகள் ஒருகால இடைவெளிக்குப் பின்னர் சீராக்கம் செய்யப்பட்டபோது வர்த்தகக்குறை ரூ. 155,610 இலட்சமாக அமைந்தது.

அட்டவணை 1.22
**வர்த்தக நிலுவை 1978– 1980**

பெறுமதி பத்[illegible] இலட்சம் ரூபாய்களில்
(சி.எ.உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் | | ஏற்றுமதிகள் | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீரக்கம் செய்யப்பட்டது | சுங்கம் | சீராக்கம் செய்யப்பட்ட | சுங்கம் | சீராக்கம் செய்யப்பட்ட |
| 1978 ... | 14,687 (774)அ | 15,100 | 13,206 (674) | 13,193 | — 1,480 (–100) | — 1,907 |
| 1979ஆ ... | 22,560 (1,121) | 22,602 | 15,273 (759) | 15,282 | — 7,287 (–362) | — 7,320 |
| 1980 ... | 33,637 (1,563) | 33,360 | 17,273 (803) | 17,799 | —16,364 (-761) | —15,561 |

(அ) 1977 நவெம்பர் 15 இற்குப்பின்னர் அந் நாளின் முன்னர் நிலவிய வீதங்களில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கட்டாகச் செய்யப்பட்ட சீராக்கங்களை உள்ளடக்கும்.

(ஆ) திருத்தப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்,
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.